**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP. 290 /2023**

நாள் 10.02.2025

**ம.சா.1. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு இன்சுரன்ஸ் மற்றும் ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு விபத்தினால் கொடுங்காயம் ஏற்பட்டதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வருமானம் குறித்து ஆவணங்கள ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வயது குறித்து ஆவணங்கள ஏதும் தாக்கல் செய்துள்ளேனா இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அவரது அறிக்கையில் எனது வாகனத்திற்கு எவ்வித சேதாரமும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பாலிசி மற்றும் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது வண்டியை எந்தவிதமான சைகையும் காண்பிக்காமல் வலதுபுறமாக திரும்பி சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் செயலினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக கோரியுள்ள இழப்பீடு கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.